World Christian Fellowship
**60, High Worple, Rayners Lane, Harrow**
Middlesex, HA2 9SZ, United Kingdom
Tel: +44 208 429 9292
www.wcflondon.com
wcflondon@gmail.com

# பிலிப்பியரின் புஸ்தகம்

***ஆசிரியர்***: *அப்போஸ்தலனாகிய பவுல் , முன்பு தர்சு பட்டணத்தானாகிய சவுல் என்று அழைக்கப்பட்டவர். அவருடைய பெற்றோர் யூத குலத்தை சார்ந்தவர்கள். ரோம குடிமக்கள். கிரேக்க மொழியை நன்கு பேச கூடியவர். கூடாரம் அமைப்பவர்.*

***எழுதிய வருடம்***:

| *நிருபங்களின் பெயர்கள்* | *எழுதிய வருடம்* |
|---|---|
| *1 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *2 தெசலோனிக்கேயர்* | *52 கி.பி.* |
| *1 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *2 கொரிந்தியர்* | *57 கி.பி.* |
| *கலாத்தியர்* | *55-57 கி.பி.* |
| *ரோமர்* | *57 கி.பி.* |
| *எபேசியர்* | *62 கி.பி.* |
| *பிலிப்பியர்* | *62 கி.பி.* |
| *கொலோசெயர்* | *52 கி.பி.* |
| *பிலேமோன்* | *63 கி.பி.* |
| *எபிரேயர்* | *64-65 கி.பி.* |
| *தீத்து* | *64-65 கி.பி.* |
| *1 தீமோத்தேயு* | *64-65 கி.பி.* |
| *2 தீமோத்தேயு* | *66-67 கி.பி.* |

## வரலாற்று பின்னணி மற்றும் நோக்கம்:

**அப்போஸ்தலர் *16: 6-10***, [6] *அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு,*
[7] *மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.*
[8] *அப்பொழுது அவர்கள் மீசியா பக்கமாய்ப் போய், துரோவாவுக்கு வந்தார்கள்.*
[9] *அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று; அதென்னவெனில், மக்கெதோனியா தேசத்தானொருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக்கொண்டதாக இருந்தது.*
[10] *அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி,*

மக்கெதோனியாவை தவிர மற்ற இடங்களுக்கு பரிசுத்த ஆவியானவர் அவர்களை போக விடவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் முதன் முதலில் சபையை நிறுவியது மக்கெதோனியாவிலுள்ள பிலிப்பி பட்டணத்தில் தான்.




*இந்த நகரம் ரோம குடியேற்ற காலனியும் மற்றும் இராணுவ புறக்காவல் நிலையமாகவும் இருந்தது. ஓய்வு பெற்ற மற்றும் காயப்பட்ட ரோம வீரர்கள் இங்கு குடியேறும்படியாக அனுப்பப்பட்டார்கள். இந்த காலனியிலுள்ள குடிமக்கள் இத்தாலியில் வசித்து வந்த ரோம குடிமக்கள் போல் கருதப்பட்டும் பலவிதமான சிறப்பு சலுகைகளும் கொடுக்கப்பட்டது. ஏனென்றால் பிலிப்பி பட்டணம் ஒரு வணிக மையமாக இல்லாமல் இராணுவ நகரமாக இருந்தது. கி.பி. 51ல் பவுல் வந்தபோது ஜெப ஆலயத்திற்கு போதுமான யூதர்கள் இல்லை.*

***அப்போஸ்தலர் 16:12,*** *அங்கேயிருந்து மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையானதும் ரோமர்*

*குடியேறினதுமான பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, அந்தப் பட்டணத்திலே சிலநாள் தங்கியிருந்தோம்.*

*"பிலிப்பி" அந்த பகுதியில் நன்கு அறியப்பட்ட நகரம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஸ்திரீயின் இருதயத்தை கர்த்தர் திறந்தருளினார். பவுலும் அவர் கூட வந்தவர்களும் அங்கே தங்கி அங்கிருந்து கிறிஸ்துவைப் பற்றி பிரசங்கித்தார்.*


***அப்போஸ்தலர் 16:16-33***, *வசனங்கள் அங்கு நடந்த சம்பவங்களை நமக்கு கூறுகிறது.*

*அப்போஸ்தலனாகிய பவுல் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருந்தபோது, வர்த்தகம் பண்ணுகிற மனுஷர்களால் உபயோகப்படுத்தப்பட்டு குறிசொல்ல ஆவியைக்கொண்டிருந்து, எதிர்க்காலத்தைப் பற்றி சொல்லுகிற ஒரு பெண் அங்கிருந்தாள். குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த வருமானத்தை அடைவதற்கு அவளை அவர்கள் உபோயகப்படுத்தினார்கள்.*

*அப்பொழுது அவள் அவர்களை (பவுல் மற்றும் உடன் இருந்தவர்கள்) பின் தொடர்ந்து, இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரரர் இவர்களுக்கு செவி கொடுங்கள் என்று சொல்லி இப்படி அநேகநாள் செய்துகொண்டுவந்தாள், பவுல் மிகவும் எரிச்சலடைந்து திரும்பிபார்த்து இயேசுவின் நாமத்தினாலே இவளை விட்டு புறப்பட்டுப் போ என்று அந்த பிசாசை அதட்டினார், அந்நேரமே அவள் விடுதலை பெற்றாள். அவளுடைய எஜமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை அற்றுப்போயிற்றென்று கண்டு, அவர்களுக்கு*

விரோதமாய் எழும்பி, அவர்கள் அடிக்கப்பட்டு இருண்ட சிறைச்சாலைக்குள்ளே போடப்பட்டார்கள்.

நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனைத் துதித்துப் பாடினார்கள்; சிறைச்சாலையின் கதவுகள் திறந்தது, இதை கண்ட அந்த சிறைக்காவலன் தன்னைக் கொலைசெய்து கொள்ளப்போனான். ஆனால், யாரும் தப்பிக்கவில்லை என்று சொல்லி பவுல் அவனை தடுத்து நிறுத்தினார். அப்பொழுது அந்த காவலாளி மனந்திரும்பி அவனும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். இவ்வாறு லீதியாளோடு இந்த சபை உருவானது.



*இந்த பிலிப்பிய சபை “ முதல் நாள் துவங்கி இந்நாள்வரைக்கும்” **(1:5)** சுவிசேஷத்தை பெருக்கும் பொருட்டு அவருடைய விருப்பங்களை பகிர்ந்து, அவருடைய பாடுகளை தங்களுடையதாக்கிக் கொண்டு மற்றும் அவருடைய ஊழியத்திலும் பங்குபெற்றார்கள். மற்ற சபைகளை காட்டிலும் இந்த சபை பண வசதியில் குறைவுள்ளதாக இருந்தாலும் ஒரு முறை அவருக்கு தெசலோனிக்கேயிலிருந்தபோதும் **(4:16)** ஒரு முறை கொரிந்துவிற்கும் **(2 கொரிந்தியர் 11:9)** மறுபடியும் இப்பொழுது ரோமாபுரிக்கும்**(4:18)** பணம் அனுப்பியிருக்கிறார்கள்.*

*அவர்கள் அவரிடத்தில் காட்டிய அன்பை **(1:9)** முழு மனதாய் அவர் குறிப்பிட்டிருக்கிறார்**(1:7-8)**. இந்தக் கடிதத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று முறை அவர்களை “பிரியமானவர்களே” என்றும் எனக்குப் பிரியமும் வாஞ்சையுமான சகோதரரே”, மற்றும் எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே **(4:1)**., என்றும் குறிப்பிடுகிறார்.*

*இந்த சபையில் சிலவற்றில் ஒத்துழைப்பு / ஒருமனம் அவர்களுக்குள் இல்லையே தவிர வேறு எந்த ஒரு பிரச்சனையும் பெரிதளவில் ஏற்படவில்லை. ஒட்டு மொத்தமாக இந்த சபை ஆவிக்குரிய வளர்ச்சியில் நன்றாக இருந்தது. ஒரே குறைபாடு என்னவெனில் அவர்களுக்குள் முழுமையான ஒற்றுமை வெளிப்படையாக இல்லை. எனவே, பவுல் அவர்கள் ஐக்கியப்பட வேண்டும் என்கிற அழைப்பை விடுத்தார் **(1:27; 2:1-4;4:2-3)**. அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த போதிலும்**(1:28)**, மற்றும் பாடுகளை அனுபவித்தும் மருளாதிருக்கிறார்கள். (they are doing well)**(1:29-30)***

## நோக்கம்:

- எப்பாப்பிரோதீத்து, என்பவன் சபையிலிருந்து பரிசு பொருட்களை கொண்டு வந்தபோது அவன் சுகவீனமடைந்து உயிருக்கு போராடியதையும் மற்றும் அவன் சுகம் பெற்று இப்பொழுது நன்றாக இருக்கிறான்;

- அவருடைய தேவைகளை சந்திக்க எப்பாப்பிரோதீத்துவின் மூலம் அவர்கள் அனுப்பிய பரிசு பொருட்களுக்காக நன்றி செலுத்தும்படி;

- அவர்களுக்குள் கலகம் ஏற்படாமல் இருக்கும்படிக்கு விசுவாசிகளுக்குள்ளே ஐக்கியம் வேண்டும் என்று கேட்டுக்கொள்வது பற்றி;

- விசுவாசத்திலே நிலைத்திருக்கவும் மற்றும் எல்லா சூழ்நிலைகளிலும் சந்தோஷமாய் இருக்க அவர்களை துரிதப்படுத்த *(Urging);*

## நிருபத்தின் சுருக்கம்:

*இந்த நிருபத்தின் அடிப்படைக் கருத்து சந்தோசம்.*

*களிகூருதல் என்கிறதான கருத்து **16** முறையாக பெயர்ச்சொல் (noun) **(1:4, 25; 2:2, 29; 4:1)** வாயிலாகவும் வினைச்சொல் (verb) **(1:18, [2 முறை]; 2:17, [2 முறை];; 2:18***

*[2 முறை];; **2:28; 3:1; 4:4,** [2 முறை];; **4:10**).* வாயிலாகவும் காணலாம். இதன் விளைவாக அப்போஸ்தலனாகிய பவுல் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்றும் சந்தோஷத்திற்கு மாதிரியாயிருங்கள் என்றும் கட்டளையிடுகிறார்!!

*இந்த நிருபத்தின் மூலம் சந்தோஷத்திற்கும் களிக்கூறுதலுக்குமான அநேக கருத்து ஆதாரங்களை காணலாம்.*

- *பாடுகளிலும் சந்தோஷம், இதன் மூலம் கர்த்தர் வெளிப்படுகிறார். **(1:12-14)***
- *மற்றவர்களுடைய நலனுக்காகவும்**(4:18)** உங்களை பலியாக ஒப்புக்கொடுத்தலில் சந்தோஷம். **(2:17-18)***
- *இயேசு கிறிஸ்து சொன்ன எடுத்துக்காட்டுக்களை பின்பற்றி அவருடைய விருப்பத்தை செய்யவதிலும்; மற்றவர்களுடைய தேவைகளை சந்திப்பதில் உள்ள சந்தோஷம். **(2:4-11)**.*
- *கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவிலும் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிகிறதிலும் இருக்கிற சந்தோஷம். **(3:8-10)**.*
- *சகோதரருக்குள்ளே ஒற்றுமை ஏற்படும் போது உண்டாகும் சந்தோஷம். **(2:4; 4:2-5)**.*
- *குறைகளெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்**(4:13, 19)**, நிறைவாகுதலின் மூலம் வாழ்க்கையில் எல்லா சூழ்நிலையிலும் உண்டாகும் சந்தோஷம்.*

*இந்த நான்கு அதிகாரங்களும் எளிதாக புரிந்து கொள்ளும் வண்ணம் நான்கு தலைப்பின் கீழ் பிரிக்கப்படுகிறது:*

*அதிகாரம் **1**: பவுலின் தற்போதைய சூழ்நிலை மற்றும் அதின் மத்தியில் ஊழியப் பெருக்கம்.*

*அதிகாரம் **2**: கிறிஸ்துவின் சிந்தைகொண்டிருக்க வேண்டும் என்று பவுல் சபையை துரிதப்படுத்துகிறார் ( urges).*

*அதிகாரம் **3**: கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவு வேண்டும் என்று பவுல் சபையிடம் கேட்டுக்கொள்கிறார்.*

*அதிகாரம் **4**: கிறிஸ்துவின் சமாதானத்தை காத்துக்கொள்ள அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.*

***அதிகாரம் 1: பவுலின் தற்போதைய சூழ்நிலை மற்றும் ஊழியத்தைப் பெருக்குதல்.***

1. *அப்போஸ்தலனாகிய பவுலின் நன்றி செலுத்துதலின் ஜெபம். (வச:**1-11**)*
2. *பவுலின் பாடுகள் சுவிசேஷம் செய்ய ஊக்குவித்தது. (வச:**12-18**)*
3. *பவுலின் பாடுகளினால் கிறிஸ்து மகிமைப்படுதல். (வச: **19-26**)*
4. *பாடுகளில் கடந்து செல்கிறவர்களுக்கு பவுலின் ஊக்குவிப்பு. (வச:**27-30**)*

***அதிகாரம் 2: கிறிஸ்துவின் சிந்தைகொண்டிருக்க வேண்டும் என்று பவுல் சபையை துரிதப்படுத்துகிறார் (urges).***

1. *மனத்தாழ்மையோடு கூடிய ஒற்றுமை வேண்டும் என்பதே பவுலின் வேண்டுகோள். (வச: **1-4**)*
2. *தாழ்மைக்கு கிறிஸ்து நமக்கு ஒரு எடுத்துக்காட்டாக. (வச: **5 - 16**)*
3. *பவுல் தன்னையே ஒரு எடுத்துக்காட்டாக. (வச: **17-18**)*
4. *தீமோத்தேயு ஒரு எடுத்தக்காட்டாக. (வச: **19-24**)*
5. *எப்பாபிரதீத்து ஒரு எடுத்தக்காட்டாக. (வச: **25-30**)*

***அதிகாரம் 3: கிறிஸ்துவைப் பற்றி அறிகிற அறிவு வேண்டும் என்று பவுல் சபையிடம் கேட்டுக்கொள்கிறார்.***

1. *தன்னம்பிக்கையைக் குறித்து எச்சரிக்கை. (வச: **1-9**)*
2. *கிறிஸ்துவை அறிந்து கொள்ள பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடர வேண்டும். (வச: **10-16**)*
3. *பரலோகத்தின் குடிமக்களாய் வாழ வேண்டும். (வச: **17-21**)*

***அதிகாரம் 4: கிறிஸ்துவின் சமாதானத்தை காத்துக்கொள்ள அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.***

1. *சகோதர சகோதரிகளோடு சமாதானம். (வச: **1-3**)*
2. *தேவனோடு சமாதானம். (வச: **4-9**)*
3. *எல்லா சூழ்நிலையிலும் சமாதானம். (வச: **10-19**)*
4. *வாழ்த்துதல் மற்றும் ஆசீர்வாதம். (வச: **20-23**)*

## ***இன்றைய பயன்பாடு:***

### *1.* பரலோகத்தை நோக்கும் வாழ்வு

*பிலிப்பியர்கள் பரலோகத்தின் குடிமக்கள் போல வாழ்ந்தார்கள்! அவர்களிடத்தில் இருந்த எல்லாவற்றையும் தேவனுடைய ராஜியத்தை பரப்பவே உபயோகப்படுத்தினார்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை எவ்வாறு வாழ்கிறீர்கள்?*

*a) பாடுபடுகிறீர்களா?அது சுவிசேஷத்தின் வளர்ச்சிக்கு பயன்படுகிறதா?*
*b) நீங்கள் கொடுப்பதில் உதார குணமுள்ளவர்காளாய் இருக்கிறீர்களா? தங்கள் ஏழ்மையான நிலைமையிலும் அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தை வடிவமைத்த சபையை போல ஒரு முன் மாதிரியாக.*
*c) தாழ்மை! இந்தக் காரியத்தில் நீங்கள் எவ்வாறு இருக்கிறீர்கள்? பவுல், ஒரு முழு அதிகாரத்தையும் இந்த பாடத்திற்கு சமர்பித்திருக்கிறார்.!*

### *2.* கிறிஸ்துவை அறிவதே உங்கள் வாழ்க்கையின் இலட்சியமாக இருக்க வேண்டுமா?

*கிறிஸ்துவைப் பற்றி அறிய வேண்டும் என்கிற போது அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கென்று எந்த ஒரு சான்றுகளையும் எடுத்துக் கொள்ளவில்லை. நம் வாழ்வில் கிறிஸ்துவை பற்றி இன்னும் அதிகமாக*

*அறிந்துகொள்ளும் இலக்கை கொண்டவர்களாக நம்முடைய வாழ்க்கையை வாழ முடியுமா?*

3. *உங்களைக்குறித்து நான் ஒரு கடிதம் எழுதினால் இப்படி எழுத முடியுமா?*

*அப்போஸ்தலனாகிய பவுல்தன்னுடைய ஆவிக்குரிய மகனும் தன் உடன் ஊழியனுமாகிய தீமோத்தியை குறித்து இப்படி எழுதுகிறார்.*

***பிலிப்பியர் 2:20-21***, *அதேனென்றால், உங்கள்*
*காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு*
*என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி*
*வேறோருவனும் என்னிடத்திலில்லை.*
*மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து*
*இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல்,*
*தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள்.*

***நீங்கள் எப்படி?***